# இவர்களுக்கா உங்கள் வாக்கு?



லண்டனில் வாழும் குஜராத்தியின் ஸ்டெர்லைட் கம்பெனிக்காக 15 தமிழர்களை சுட்டுக்கொன்ற எடப்பாடி அரசு.




மோடியின் சாட்டைக்கு பயந்து நடுங்கி சர்க்கஸ் விந்தைகள் புரியும் பாஜகவின் அடிமைகளாக மாறிப்போன OPSசும் EPSசும்



விவசாயிகளையும், விவசாயத்தையும் கார்ப்பரேட்டுக்கு அடகு வைத்த பாசிச மோடி அரசு



தூத்துக்குடியில் ஸ்டெர்லைட் நச்சு ஆலைக்கு எதிராக போராடிய மக்கள் மீது எடப்பாடி பழனிச்சாமியின் கீழ் இயங்கும் காவல்துறை நடத்திய அரச பயங்கரவாதம்



தமிழர்களின் குடும்பங்களை சீரழித்துவரும் மதுக்கடைகளை மூட பெண்கள் போராடிய போது, பெண்களை தாக்கியதோடு போராடியவர்கள் மீது வழக்கு பதிந்தது எடப்பாடி அதிமுக அரசு

விழிப்புணர்வு வெளியீடு

## மே பதினேழு இயக்கம்

**மே17 பதிப்பகம்**
புதிய எண்-18,
சுப்ரிதா பிளாட்ஸ்,
அவ்வையார் தெரு
நங்கநல்லூர்,
சென்னை - 600061

அட்டை படம்
நன்றி : விகடன்
பக்கம்: 24
தாள் : 70 ஜிஎஸ்எம்
நன்கொடை: ரூ.5/-

**May17 Publications**
New no-18,
Subratha Flats,
Avvaiyar street,
Nanganallur,
Chennai - 600 061
Phone: 98840 72010

Wrapper : Vikatan
Page : 24
Paper : 70 GSM
Price : Rs. 5/-

**வீழட்டும் அதிமுக-பாஜக,**
**வெல்லட்டும் தமிழ்நாடு**

## மே17 இயக்கத்தின் மீதான அடக்குமுறைகள்

மே பதினேழு இயக்கம் 2009இல் இலங்கையில் ஈழத்தமிழர்கள் படுகொலை செய்யப்பட்ட தினத்தை பெயராக ஏற்று தமிழர் உரிமைகளுக்காக போராடுகிற மக்கள் இயக்கம். தமிழீழம் மட்டுமல்லாது, காவிரி உரிமை, மீத்தேன் எதிர்ப்பு, மீனவர் உரிமை, இடஒதுக்கீடு உரிமை, கல்வி உரிமை, இந்தி எதிர்ப்பு, 7 தமிழர் விடுதலை, 8 வழிச்சாலை எதிர்ப்பு, கெயில் எதிர்ப்பு, தண்ணீர் தனியார்மயம் எதிர்ப்பு, சூழலியல் பாதுகாப்பு என பலவற்றிற்காக அறவழியில் போராடும் இளைஞர் அமைப்பு.

எடப்பாடி தலைமயிலான அதிமுக அரசு பாஜக அரசுடன் கைகோர்த்து மே17 இயக்கத்தின் மீது கடுமையான ஒடுக்குமுறையை ஏவியது. தோழர் திருமுருகன் காந்தி உட்பட பல தோழர்களை சிறையிலடைத்தது. பல பொய் வழக்குகளை போட்டது. பொது நிகழ்ச்சிகளுக்கு தடை விதித்தது. இந்த ஒடுக்குமுறைகளை மீறி மே17 இயக்கம் ஈழ விடுதலை மட்டுமல்லாது காவிரி உரிமையை, மீனவர் உரிமையை ஐ.நாவின் மனித உரிமை அவையில் பதிவு செய்தது. கர்நாடகாவில் தமிழர்கள் தாக்கப்பட்டதை ஐ.நா அவைக்கு கொண்டு சென்றது. மேலும் ஸ்டெர்லைட் படுகொலையை ஐ.நா அவை மட்டுமல்லாது ஐரோப்பிய நாடுகளுக்கும், சர்வதேச ஊடகங்களுக்கும் எடுத்துச் சென்று நியாயம் கோரியது. இதனால், இவ்வமைப்பின் ஒருங்கிணைப்பாளர் திருமுருகன் காந்தி ஐரோப்பாவில் இருந்து இந்தியா திரும்பும் பொழுது பெங்களூர் விமானநிலையத்தில் கைது செய்யப்பட்டார். தேச துரோக வழக்குகள் உட்பட 45க்கும் அதிகமான வழக்குகளை போட்டு சிறையில் அடைத்தது. மே17 இயக்கத் தோழர்களை காவல்துறையை வைத்து தொடர்ந்து மிரட்டியது. இந்த அடக்குமுறைகளை நெஞ்சுரத்துடன் எதிர்கொண்டு தொடர்ந்து தமிழர்களுக்காக மே17 இயக்கம் போராடி வருகிறது.

கடந்த அதிமுக ஆட்சியில் நடைபெற்ற மக்கள் விரோத திட்டங்கள், சட்டங்கள், நடவடிக்கைகளுக்கு எதிராக நடத்திய போராட்டங்கள், கோரிக்கைகளை இங்கே பட்டியலிடுகிறோம். இப்படியாக தமிழர் விரோத கொடுங்கோல் ஆட்சியை நடத்திய அதிமுக-பாஜகவினை தமிழர்கள் புறக்கணிக்க வேண்டுமென்ற வேண்டுகோளுக்கான ஆதாரப்பூர்வ தகவல்களோடு இந்த ஆவணத்தை உங்களுக்கு அளிக்கிறோம். மே17 இயக்கத்தை ஆதரித்து, கைகோர்த்து தமிழர்கள் உரிமையை பாதுகாக்க முன்வரவேண்டுமென கேட்டுக்கொள்கிறோம். தேர்தல்களில் பங்கெடுக்காத எங்கள் இயக்கம் தமிழர் நலனுக்காக தன்னலமின்றி உழைக்கும் இளைஞர்களை மட்டுமே உறுப்பினர்களாக வைத்திருக்கிறது. நீங்களும் இணைந்து தமிழர் நலன் காக்க முன்வாருங்கள் என அழைக்கிறோம்

**இயக்கத்தில் இணைய/வாட்ஸ்அப்/டெலிகிராம்/சிக்னல்: 98848 64010 | 94443 27010**





2016 இல் தமிழீழத்தில் இனப்படுகொலை செய்யப்பட்ட ஒன்றரை லட்சம் தமிழர்களை நினைவு கூறும் வகையில் மெரினாவில் மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலி செலுத்தியதற்காக குண்டர் சட்டம் போடப்பட்டு நான்கு மாதம் சிறையில் அடைக்கப்பட்டார்.

2018 இல் தூத்துக்குடியில் ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராக போராடியதற்காக 17 தமிழர்கள் சுட்டுக் கொலப்பட்டனர். இந்த அரச ஒடுக்குமுறையை பற்றி ஐ.நா சபையின் மனித உரிமை மன்றத்தில் பேசி சர்வதேச அளவில் கொண்டு சென்றதற்காக UAPA சட்டத்தால் கைது செய்யப்பட்டு இரண்டு மாதம் வரை சிறையில் அடைக்கப்பட்டார்.

## 40க்கும் மேற்பட்ட வழக்குகள்,

- மீத்தேன், 8 வழிச்சாலை, காவிரி பிரச்சனை, நியூட்டிரினோ என்று தமிழர்களின் நிலம், தண்ணீர், சுற்றுச்சூழல் என்று தமிழர்களின் வாழ்வியலை அழிக்கும் திட்டங்களை எதிர்த்து களத்தில் போராடியதற்காக
- தங்கை அனிதாவை கொன்ற நீட் தேர்வு, புதிய கல்விக் கொள்கை, பிற்படுத்தப்பட்ட மற்றும் ஒடுக்கப்பட்ட சமூகத்திற்கு மறுக்கப்பட்ட இடஒதுக்கீடு மற்றும் உதவித்தொகை என்று நம் பிள்ளைகளின் எதிர்காலத்தை சிதைக்கும் மத்திய அரசின் கொள்கைகளை எதிர்த்து பேசியதற்காக
- கீழடி போன்ற பண்பாட்டு அடையாளங்களை காக்க போராடியதற்காக, தந்தை பெரியார் மற்றும் அண்ணல் அம்பேத்கர் சிலைகளுக்கு மாலை அணிவித்ததற்காக என்று பா.ஜ.க வின் தூண்டுதலால் பதிந்துள்ளது எடப்பாடி அரசு.

இயக்கத்தில் இணைய/வாட்ஸ்அப்/டெலிகிராம்/சிக்னல்: **98848 64010 | 94443 27010**

வீழட்டும் அதிமுக-பாஜக, வெல்லட்டும் தமிழ்நாடு

# ‘நீட்’ அரக்கன்

## நம் குழந்தைகளின் கனவுகளை அழிக்கும் ’நீட்’ தேர்வுகள்





### நீட் தேர்வு

- நம்ம வீட்டு பசங்க இனி பன்னிரண்டாம் வகுப்புல நல்ல மார்க் எடுத்தாலும் டாக்டராக முடியாது.
- ஏன்னு கேக்குறீங்களா.. டாக்டருக்கு படிக்க பன்னிரண்டாம் வகுப்பு பாஸ் பண்ணா மட்டும் பத்தாதாம் கூடவே நீட் பரிட்சையும் பாஸ் பண்ணி நல்ல மார்க் எடுக்கனுமாம்.
- அது என்ன நீட் தேர்வு? தமிழ்நாட்டில கிராமத்திலிருந்து நல்லா படிச்சு பன்னிரண்டாவதுல நல்ல மார்க் எடுத்து கவர்மெண்ட் மெடிக்கல் காலேஜ்ல படிச்சி நிறையபேர் டாக்டராகி இருக்காங்கல்ல அது தான் இந்த பார்ப்பனர்களுக்கும், பிஜேபிக்கும் புடிக்கல.
- நம்ம வீட்டு பசங்க யாரும் பாஸ் பண்ணக் கூடாதுனே பிஜேபி இந்த பரிட்சைய கொண்டு வந்தாங்க அதை தடுக்காம முழுசா ஆதரிச்சது தான் அதிமுக அரசு.
- நீட்டுக்கு படிக்க தனியார் பயிற்சி மையத்தில பல ஆயிரம் ருபாய் செலவு செஞ்சி பணக்கார வீட்டு பசங்க தான் படிக்கும். நம்ம வீட்டு பசங்க என்ன பன்னும். இந்த நீட்டால குழந்தையிலிருந்துநான் டாக்டர் ஆயிடுவேனு நினைச்சிட்டு இருந்த நம்ம பசங்க தான் மனசு உடைஞ்சு போகுறாங்க
- ஆமாம் நம் தங்கச்சி அனிதாவ கொன்னது இந்த அதிமுக + பிஜேபி அரசாங்கம் தான்.

**இவங்களுக்கா நீங்க உங்க ஓட்டை போட போறீங்க.?**

## மே பதினேழு இயக்க போராட்டங்கள்







இயக்கத்தில் இணைய/வாட்ஸ்அப்/டெலிகிராம்/சிக்னல்: **98848 64010 | 94443 27010**

வீழட்டும் அதிமுக-பாஜக, வெல்லட்டும் தமிழ்நாடு

# 'ஜிஎஸ்டி' வரிக் கொள்ளை


## உழைத்தவனிடம் பிடுங்கி கொழுத்தவனுக்கு குடுத்த கதை






### GST (சரக்கு மற்றும் சேவை வரி)

- தமிழ் நாட்டோட வரி வருமானம் இந்தியாவின் மற்ற மாநிலங்களைவிட அதிகம்
- நம்ம மாநிலத்தோட வரியை நேரடியா நம்ம தமிழ்நாடு அரசே எடுத்துக்க முடியாது அதை நேரா மத்திய அரசு வசூல் பன்னி அப்புறமா மத்திய அரசு விரும்பும் போது தமிழ்நாட்டு அரசுக்கு கொடுப்பாங்க அதுக்கு பேரு தான் GST
- இந்த GST வந்ததால பெரிய வியாபாரிங்க காசு செலவு பண்ணி ஆடிட்டர வச்சி வரி தாக்கல் செய்யறாங்க.நம்ம ஊரு சிறு வியாபாரிங்க தான் வரி தாக்கல் செய்ய ரொம்ப கஷ்டப்பட்டுக்கிட்டிடு இருக்காங்க.
- இந்த வரிமுறை வந்தா மக்கள் வாங்குற பொருளுடைய விலையெல்லாம் குறைஞ்சிடும் அப்படின்னு பிஜேபி சொல்லிச்சு ஆனால் உண்மையில் அப்படி நடந்ததா? விலைவாசி தான் ஒவ்வொரு நாளும் அதிகமாயிட்டு இருக்கு.
- அது மட்டும் இல்லை முன்னாள் முதல்வர் செல்வி ஜெயலலிதா உயிரோடு இருந்தவரை இந்த GST வரி முறைய ஏத்துக்காம இருந்தாங்க.
- இந்த வரி வசூலிக்கும் முறை மூலமா நம்ம தமிழ்நாட்டோட பணம் 12000 கோடி. இது வரை நமக்கு கொடுக்காம பிஜேபி அரசாங்கம் ஏமாத்துறாங்க அதை கேட்டு வாங்காம அதிமுக அரசு பிஜேபி கூட்டணியில அடிமையா இருந்தது.





இயக்கத்தில் இணைய/வாட்ஸ்அப்/டெலிகிராம்/சிக்னல்: **98848 64010 | 94443 27010**

### வீழட்டும் அதிமுக-பாஜக, வெல்லட்டும் தமிழ்நாடு

# பறிக்கப்பட்ட ‘காவிரி உரிமை’

## இழந்த காவிரி உரிமை, அழியும் டெல்டா.
## தஞ்சை நெற்களஞ்சியத்தை அழிக்கும் துயரம்





### காவிரி

- காவிரி நீரில் தமிழ்நாட்டோட பங்கு பல வருடங்களாக குறைக்கப்பட்டு வந்தது. காவிரியில் தமிழ்நாட்டின் உரிமையை நிலைநாட்ட வேண்டும் என்று 2018 ல் தமிழக முழுவதும் மக்கள் போராட்டம் நடைபெற்றது. 378 டிஎம்சி தான் நமது உரிமை என்று மே 17 இயக்கம் தொடர்ந்து முழங்கி வருகிறது.
- பிரதமர் மோடி தமிழ்நாடு வருகையின் போது அரசியல் இயக்கங்கள் எதிர் கட்சிகள் அவருக்கு கருப்புக்கொடி காண்பித்து தமிழ் நாட்டின் எதிர்ப்பை பதிவு செய்தனர்.
- காவிரி பிரச்சனைக்காக மதிமுக பொதுச்செயலாளர் வைகோ அவர்களின் உறவினர் ஒருவர் தீக்குளித்து இறந்தார்.
- 498 டிஎம்ஸி பங்கு கேட்டு வந்த நமக்கு நடுவன் நீதிமன்றம் 192 டிஎம்ஸி தர வேண்டும் என்று தீர்ப்பளித்தது. ஆனால் 24778 இலட்சம் பாசனபரப்பை கொண்ட நமக்கு 177.25 டிஎம்ஸி தான் என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.
- இந்த முரணையெல்லாம் மறைப்பதற்கு தான் காவிரி மேலாண்மை வாரியம் என்பது முன்வைக்கப்பட்டது.பிறகு நீதிமன்றம் தலையிட்டு அமைக்கப்பட வேண்டும் என்றது. பிறகு அதற்கே மக்கள் தொடர் போராட்டம் நடத்திய பின் தான் மத்திய பிஜேபி அரசு அமைத்தது.
- இப்படி நமக்கும் கர்நாடக மாநிலத்திற்கும் சண்டையை உருவாக்கிவிட்டு, மாநிலங்களுக்கு இடையேயான நதிநீர் சிக்கலுக்கான ஆணைய திருத்த மசோதா’2019யை (The Inter-State River Water Disputes (Amendment) Bill, 2019) பாராளுமன்றத்தில் மத்திய மோடி அரசு தாக்கல் செய்திருக்கிறது.
- இந்த மசோதா நிறைவேற்றப்பட்டால் நீதிமன்ற தீர்ப்பு, ஆணையம் இது எதுவும் செல்லாது. மாநிலங்களின் உரிமைகள் பறிக்கப்பட்டு சர்வ அதிகாரம் கொண்ட ஒரே ஆணையமாக அது மத்திய அரசிடம் இருக்கும்.
- அடிமை அதிமுக கூட்டணிக்கு நீங்கள் வாக்களித்தால் அவர்கள் இந்த மசோதாவை சட்டமாக்க ஆதரவு அளிப்பார்கள். வாக்களிக்கும் முன் சிந்தியுங்கள்.

### மே பதினேழு இயக்க போராட்டங்கள்








இயக்கத்தில் இணைய/வாட்ஸ்அப்/டெலிகிராம்/சிக்னல்: **98848 64010 | 94443 27010**

வீழட்டும் அதிமுக-பாஜக, வெல்லட்டும் தமிழ்நாடு

# புதிய கல்விக் கொள்கை

## படிக்க வராதே!! பரம்பரைத் தொழிலைச் செய்!
## பாழுங்கிணற்றில் தள்ளும் புதிய காவி கல்விக் கொள்கை







### தேசிய கல்வி கொள்கை (NEP)

- தமிழ்நாட்டில் பத்தாம் வகுப்புக்கே பொது தேர்வு வேண்டாம், நம் குழந்தைகளை மன உளைச்சலுக்கு ஆளாக வேண்டாம் என்று நாம் மாற்றியிருக்கிறோம். ஆனால் இந்த திட்டம் மூலமாக நம் குழந்தைகள் மூன்றாம் வகுப்புக்கே பொது தேர்வு எழுத வேண்டும் என்கிற கொடுமை வருகிறது. LKG, UKG அனுப்புவது என்பதையே ஒரு கொடூரமான வன்முறை என்று நாம் பேசிக்கொண்டு உள்ள நேரத்தில் இது அரசினுடைய பாடத்திட்டமாக வருகிறது.
- புதிய கல்வி கொள்ககை என்ற பெயரில் தர்மா அதர்மா என்கிற இந்தியாவின் மரபை நம் குழந்தைகளுக்கு சொல்லிக் கொடுக்க வேண்டும் என்று மனுஸ்மிருதியை நம்ம குழந்தைகளுக்கு சொல்லிக் கொடுக்க திட்டமிடுகிறது பாஜக அரசு.
- இந்த திட்டம் வந்தால் இந்தியாவின் GER(Gross Enrollment Ratio) என்று சொல்லப்படுகிற 17 வயது முதல் 24 வரை உள்ளவர்களின் கல்வி கற்கும் விகிதத்தை அதிகப்படுத்தலாம், அது 2035 ல் 50% அடையும் என்று சொல்கிறார்கள். இன்று இந்தியாவின் சராசரி 26.3% தான் ஆனால் தமிழ்நாடோ 49.2%யை இப்பொழுதே அடைந்து விட்டது.
- குலக்கல்வி முறையை கொண்டு வருவது நம் குழந்தைகளுக்கு அதிகமான தேர்வுகளை வைத்து அவர்களை படிக்க விடாமல் செய்வது என்ற திட்டத்தோடு கொண்டு வரப்பட்ட இந்த புதிய கல்விக் கொள்கையை நிறைவேற்ற பாராளுமன்றத்தில் ஆதரவளித்துதான் இந்த அடிமை அதிமுக அரசு.

### மே பதினேழு இயக்க போராட்டங்கள்








இயக்கத்தில் இணைய/வாட்ஸ்அப்/டெலிகிராம்/சிக்னல்: **98848 64010 | 94443 27010**

வீழட்டும் அதிமுக-பாஜக, வெல்லட்டும் தமிழ்நாடு

# ‘குடியுரிமை திருத்தச் சட்டம்‘ எனும் கொடூரம்

## மண்ணின் மைந்தனை அகதியாக்கும் புதிய குற்றப்பரம்பரைச் சட்டம்.

## பிஜேபியை பிடிக்கவில்லையா? பாகிஸ்தான் போ என மிரட்டும் கும்பல்





### CAA குடியுரிமை திருத்தச் சட்டம்

- மதத்தைக் கொண்டு மக்களை பிளவுப் படுத்தும், மற்றும் குடிபெயர்ந்த ஈழத்தமிழர்களுக்கும் எதிரான குடியுரிமை திருத்த சட்டத்தை பாஜக அரசு கொண்டுவந்தது.
- அதற்கு ஆதரவாக அதிமுக மற்றும் பாமக நாடாளுமன்றத்தில் வாக்களித்து பெரும் துரோகத்தை செய்தது.
- அதனை எதிர்த்து அமைதி வழியில் போராடிய மக்களை வன்முறை கொண்டு அடக்கி ஒடுக்கியது. குண்டர் சட்டம் உட்பட கருப்பு சட்டங்களை ஏவியது.
- இப்படி மக்கள் விரோத சட்டத்தை அதிமுகவும் பாமகவும் ஆதரித்துவிட்டு மக்களிடமே மீண்டும் ஓட்டு கேட்டு வருவதை நாம் அனுமதிக்கலாமா?.

### மே பதினேழு இயக்க போராட்டங்கள்







இயக்கத்தில் இணைய/வாட்ஸ்அப்/டெலிகிராம்/சிக்னல்: **98848 64010 | 94443 27010**

வீழட்டும் அதிமுக-பாஜக, வெல்லட்டும் தமிழ்நாடு

# ‘எட்டு வழிச் சாலை’ எனும் எமன்

## விளைஞ்ச நிலத்தை அழிச்சி, ரோடு போடும் ஏழை விவசாயி மகன்.





### 8 வழிச்சாலை

- விவசாயிகளுக்கு எதிராக விவசாய சட்டம் கொண்டுவந்து கார்பரேட் கம்பெனிகளுக்கு விவசாயத்தை உள்ளே கொண்டு வருகிறது பாஜக.
- அதுக்கு ஆதரவாக அதிமுக வாக்கு செலுத்தியது.
- கம்பெனிகளுக்கு இந்தியா முழுவதும் சரக்கு கொண்டு செல்ல நல்ல சாலை வேண்டும். அதற்காக 8 வழி சாலை திட்டம் போட்டிருக்கிறது பாஜக.
- அதிமுக அதற்காக நில அபகரிப்பை விவசாயிகளிடம்செய்கிறது. சேலம், தருமபுரி, திருவண்ணாமலை உள்ளிட்ட மாவட்டங்களின் விவசாய நிலம், தோப்பு உள்ளிட்டவையின் ஊடாக 8 வழி சாலை திட்டமிடப்பட்டுள்ளது.
- அதனால் 150 தமிழக கிராமங்கள் பாதிக்கப்படும். ஆனால் அதிமுகவுக்கோ பாஜகவுக்கோ கவலையில்லை. அவர்களுக்கு அதானியும் அம்பானியும்தான் முக்கியம்.
- உங்கள் நிலத்தை பிடுங்கி உங்களை விரட்டத்துடிக்கும் பாஜகவிற்கும், அதற்கு துணை நிற்கும் அதிமுகவிற்கு மட்டும் வாக்களிக்காதீர்.

### எட்டுவழிச்சாலைக்கு எதிரான மக்கள் போராட்டங்கள்





இயக்கத்தில் இணைய/வாட்ஸ்அப்/டெலிகிராம்/சிக்னல்: **98848 64010 | 94443 27010**

வீழட்டும் அதிமுக-பாஜக, வெல்லட்டும் தமிழ்நாடு

# விண்ணைத் தொடும் ‘பெட்ரோல் டீசல் விலை’

## விமானத்துக்கு போடும் பெட்ரோலை விட டிவிஎஸ் வண்டிக்கு போடும் பெட்ரோல் அதிக விலையா?



### பெட்ரோல் டீசல்

- பெட்ரோல் டீசல் விலை தான் எல்லா பொருட்களின் விலை ஏற்றத்தையும் தீர்மானிக்கிறது.
- டீசல் விலை ஏறும்போது போது நமக்கு லாரிகள் மூலம் கொண்டு வந்து சேர்க்கப்படும் பால், காய்கறி, மளிகை பொருட்கள் மீது தான் அந்த விலை ஏற்றம் திணிக்கப்படும்.
- உதாரணமாக 2011 ல் ஒரு லிட்டர் டீசல் விலை 44, இன்று 87.1 மற்றும் பாலின் விலை 2011 ல் 18, இன்று 51. இரண்டு மடங்கு டீசல் விலை உயர்ந்துள்ளது. இரண்டு மடங்குக்கு அதிகமாக பால் விலை உயர்ந்துள்ளது.
- பேருந்து கட்டணம் குறைந்தபட்சம், 3 ரூபாய். இன்று குறைந்தபட்ச கட்டணம் 11 ரூபாய். அப்படி இருந்தும் போக்குவரத்து துறைகள் நட்டத்தில் இயங்குகின்றன. காரணம் உயர்த்தப்படும் விலை அனைத்தும் டீசலுக்காகவே செலவிடப்படுகிறது.
- 2011 யை ஒப்பிடும் போது டீசலும் பெட்ரோலும் இரண்டு மடங்கு உயர்ந்துள்ளது. நமது சம்பளமும், வாழ்க்கை தரமும் உயர்ந்துள்ளதா?

---

# பறிபோகும் ‘வேலைவாய்ப்பு’

## எடப்பாடி-மோடியின் சாதனை: வேலையில்லா பட்டதாரிகள்

## வேலையிழப்பு பொருளாதாரத்திற்கு நல்ல அறிகுறி

- பியுஸ் கோயல், பிஜேபியின் மத்திய அமைச்சர்




### வேலையிழப்பு

- படிப்பு முடித்து வேலை தேடி நம் வீட்டு பிள்ளைகள் சென்னை, கோவை, திருச்சி, மதுரை போன்ற நகரங்களுக்கு செல்கின்றனர்.
- வாழ்க்கையை தொடங்க நகரங்களை நோக்கி செல்பவர்களுக்கு கிடைப்பது Swiggy, Zomato, Dunzo, Ola, Uber போன்ற நிறுவனங்களில் டெலிவரி அல்லது டிரைவர் வேலை.
- மத்திய மற்றும் மாநில அரசுப் பணிகளில் நிரப்பப்படாத பணியிடங்கள் லட்சக் கணக்கில் இருக்கின்றன. இதிலெல்லாம் இட ஒதுக்கீடு முறையில் பணி நியமனம் நடந்தால் குறைந்து தமிழ்நாட்டிலிருந்து 1 லட்சம் பேருக்காவது வேலை கிடைத்திருக்கும்.
- மாநில அரசுப் பணியில் ஓய்வு வயதை 58 லிருந்து 60 தாக மாற்றியதனால் வேலை கிடைக்காமல் லட்சக்கணக்கான இளைஞர்கள் தவிக்கின்றனர்.
- இவை அனைத்தையும் அரசு முறையாக செய்திருந்தால் 50 லட்சத்துக்கும் அதிகமாக வேலையில்லாமல் இருப்பவர்களில் சிலருக்காவது வேலை கிடைத்திருக்கும்.

இயக்கத்தில் இணைய/வாட்ஸ்அப்/டெலிகிராம்/சிக்னல்: **98848 64010 | 94443 27010**

### வீழட்டும் அதிமுக-பாஜக, வெல்லட்டும் தமிழ்நாடு

# உயிரைக் கொல்லும் ‘டாஸ்மார்க்‘

### குடியால் நான் குடிக்காகவே நான்-அதிமுக அரசு

## மதுநிறைந்த மாநிலமாக மாறிய தமிழ் மாநிலம்

## பாஜக (குடி) நாட்டுக்கு வீட்டுக்கு பெண்களுக்கு கேடு



### டாஸ்மாக்

- பள்ளிகள் குடியிருப்பு பகுதிகள் என்று எல்லாம் பாரபட்சம் இல்லாமல் டாஸ்மாக்.
- பெண்கள் வீதிக்கு வந்து போராடியும் அதிமுக அரசுக்கு காது கேக்காது. அதிமுகவுக்கு லாபம்தான் முக்கியம். மக்கள் உடல்நலம் இரண்டாம் பட்சம்.
- திருநெல்வேலி மாவட்டம் சங்கரன்கோயிலைச் சேர்ந்த தினேஷ் (17) என்ற பள்ளி மாணவன் தனது மரணத்திற்கு பிறகாவது தமிழகத்தில் உள்ள டாஸ்மாக் மதுக்கடைகளை பிரதமர் மோதி மற்றும் தமிழக முதல்வர் எடப்பாடி பழனிசாமி ஆகியோர் மூடவேண்டும் என்று கோரி கடிதம் எழுதிவைத்துவிட்டு தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டார்.
- காந்தியவாதி சசிபெருமாள் உட்பட இன்னும் பலபேர் டாஸ்மாக்கை மூடக்கோரி இறந்து போயிருக்கிறார்கள்.
- கொரோனா ஊரடங்கில்கூட மக்கள் நாசமாக போகட்டும், நமக்கு லாபம்தான் முக்கியம் என டாஸ்மாக்கை திறந்து விட்டு கொரொனா எண்ணிக்கை பலமடங்கு உயர்ந்தது.
- மூட சொன்ன கடையை நீதிமன்றத்திற்கு போய் வழக்காடி திறக்கிறார்கள்.
- அதில் காட்டும் ஆர்வம் உரிமை சார்ந்த விசயத்தில் காட்டியிருந்தால் நீட், இட ஒதுக்கீடு, காவிரி, ஜி எஸ்டி மாதிரி விசயத்தில் நமக்கு கிடைத்திருக்கும்.
- இதுதான் அதிமுகவின் லட்சனம். பெண்களின் வாழ்வை சீரழிக்கும் அதிமுகவை புறக்கணிப்போம்.

---

## அதிமுக அமைச்சருக்கு குட்கா அவர் மாமனாருக்கு கான்ட்ராக்ட்






### குட்கா ஊழல்

- புகையிலை கலந்து தயாரிக்கப்படும் குட்கா, பான் மசாலா போன்ற பாக்கு வடிவிலான போதைப் பொருட்களை தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யவும், விற்பனை செய்யவும் தடைசெய்து கடந்த 2013ஆம் ஆண்டு மே மாதம் தமிழக அரசு உத்தரவிட்டார் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா.
- ஆனால் அதிமுக அமைச்சர் விஜயபாஸ்கர் மற்றும் தமிழக டிஜிபி டிகே ராஜேந்திரன் கள்ளசந்தையில் அதை விற்கவும் உற்பத்தி செய்யவும் ஆரம்பித்தார்.
- கோடிக்கணக்கான லஞ்சப்பணத்திற்கு பதில் தமிழக இளைஞர்களின் உடல்நிலையை விற்பனை செய்திருக்கிறார்கள் அதிமுக அமைச்சர்கள் மற்றும் நிர்வாகிகள்.

இயக்கத்தில் இணைய/வாட்ஸ்அப்/டெலிகிராம்/சிக்னல்: **98848 64010 | 94443 27010**

வீழட்டும் அதிமுக-பாஜக, வெல்லட்டும் தமிழ்நாடு

# சோற்றில் அடிக்கும் ‘விவசாயச் சட்டம்‘

## சொந்த நிலத்தில் அடிமைகளாக மாற்றப்படும் விவசாயிகள். மார்வாடியிடம் விவசாய நிலங்களை அடகு வைத்த மோடி







### விவசாய மசோதா

- கம்ப்யூட்டரில் வேலை பார்த்தாலும் பசித்தால் அம்பானி தினம் தரும் 2 GB டேட்டா வை சாப்பிட்டு உயிர் வாழ முடியாது.
- எல்லாவற்றிற்கும் மாற்று வழி உண்டு. ஆனால் உணவு தயாரிப்புக்கு மாற்று வழி என்று எதுவும் இல்லை. விவசாயம் தான் ஒரே வழி.
- புதிய 3 வேளாண் விவசாய சட்டம் ஆயிரமாயிரம் ஆண்டுகளாய் நம்மிடம் இருக்கும் விவசாயத்தை பெருமுதலாளிகளிடம் கொண்டு சேர்க்கப் போகிறது.
- விவசாய உற்பத்தி பொருட்களுக்கு குறைந்தபட்ச ஆதாரவிலை கிடையாது. பெருமுதலாளிகள் தாங்கள் நினைக்கும் விலைக்கு பொருட்களை வாங்கிக் கொள்ளலாம். உணவுப் பொருட்கள் அனைத்தும் அத்தியாவசிய பட்டியல் பிரிவிலிருந்து நீக்கப்பட்டதால் அதானியும், அம்பானியும் உணவு தானியங்களை பதுக்கி வைத்து சந்தையில் விலையை செயற்கையாக ஏற்றி அதிக லாபத்துக்கு விற்கலாம்.
- Contract farming அதாவது ஒப்பந்த விவசாயம் செய்ய வழி வகை செய்யும் சட்டத்தையும் கொண்டு வந்துள்ளது அதிமுக வின் முதலாளியான பாஜக அரசு. இதன்மூலம் இனி அதானி மற்றும் அம்பானி என்ன விரும்புகிறார்களோ அதைத்தான் நாம் விவசாயம் செய்து அவர்கள் சொல்லும் விலைக்கு அவர்களிடமே விற்க வேண்டும்

## மே பதினேழு இயக்க போராட்டங்கள்








இயக்கத்தில் இணைய/வாட்ஸ்அப்/டெலிகிராம்/சிக்னல்: 98848 64010 | 94443 27010

வீழட்டும் அதிமுக-பாஜக, வெல்லட்டும் தமிழ்நாடு

# கொலை செய்யும் அரசு

## பென்னிக்ஸ்-ஜெயராஜ் படுகொலை


## அதிமுக அரசின் காட்டுமிராண்டி காவல்துறை





### சாத்தான்குளம் படுகொலை

- ஜெயராஜ் – தந்தை, பென்னிக்ஸ் மகன். இருவரும் செல்ஃபோன் கடை நடத்தினார்கள்.
- இலவசமாக செல்போன் கொடுக்கவில்லை என்பதற்காக இருவரும் காவல்நிலையத்துக்கு அழைத்து செல்லப்பட்டு கொல்லப்பட்டார்கள்.
- பென்னிக்ஸ் ஆசனவாயிலில் லத்தியை சொருகி தலைகீழாகத் தொங்க விட்டு கொலை செய்யப்பட்டார்கள்.
- இதுதான் அதிமுக ஆட்சியில் காவல்துறை செய்த அராஜகத்திற்கு ஒரு எடுத்துகாட்டு.
- காவலர்களுக்கு தண்டனை– வெறும் இடமாற்றம்.
- நடந்த போது பேசினோம்
- இந்த மாதிரி தொடர்ச்சியாக நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கிறது.
- அதிமுக மறுமடியும் ஆட்சிக்கு வந்தால், நேற்று பெனிக்ஸ் – ஜெயராஜ். நாளை நாம்.





இயக்கத்தில் இணைய/வாட்ஸ்அப்/டெலிகிராம்/சிக்னல்: **98848 64010 | 94443 27010**

வீழட்டும் அதிமுக-பாஜக, வெல்லட்டும் தமிழ்நாடு

# ‘பொள்ளாச்சி கொடூரம்‘

## “பெல்டால அடிக்காதீங்கண்ணா... வலிக்குது..

## கதறி அழும் பெண்ணின் குரலை மறக்க முடியுமா?

## பெண்களே எப்படி போடுவீர்கள் அதிமுக-பாஜகவிற்கு ஓட்டு





### பொள்ளாச்சி பாலியல் வழக்கு

- அதிமுக– பாஜக கட்சியோட அரசியல் செல்வாக்கை வைத்து 50 பெண்களுக்கு மேல் பாலியல் தொல்லை குடுத்தாங்க நாலு பேர்.
- ஒரு பெண்ணை அடித்து அவர் தன்னை விட்டுவிட சொல்லி கதறி அழும் வீடியோ வெளியே பரவியது.
- நடந்து இரண்டு ஆண்டு ஆகியும் கட்சி செல்வாக்கினால் அவர்கள் இன்னும் தண்டிக்கப் படவில்லை.
- காவல்துறை கைது செய்த 7 பேரில் கிட்டத்தட்ட எல்லாரும் அதிமுக பாஜக கட்சி ஆட்கள்.
- பாஜக உள்ளிட்ட கட்சிகளுக்கு பெண்களை ஏமாற்றி சப்ளை செய்யும் செக்ஸ் மாஃபியாவா நடந்தது இது.
- அதை கண்டுக்கொள்ளாமல் விட்டது அதிமுக.
- அதில் ஒருவர் பொள்ளாச்சியின் அதிமுக மாணவர் பிரிவுத் தலைவர்.
- நாகர்கோவில் காசிக்கு தண்டனை கொடுத்ததா இந்த ஆட்சி
- பெண்கள் குழந்தைகள் உங்கள் வீட்டில் இருந்தார்கள் எனில்அதிமுக பாஜக கூட்டணியை புறக்கணிப்போம்.

### மே பதினேழு இயக்க போராட்டங்கள்






இயக்கத்தில் இணைய/வாட்ஸ்அப்/டெலிகிராம்/சிக்னல்: **98848 64010 | 94443 27010**

வீழட்டும் அதிமுக-பாஜக, வெல்லட்டும் தமிழ்நாடு

# பொறுப்பற்ற அரசியல்

## அதிமுகவின் விளம்பரப் பிரியமும் பலியான உயிர்களும்

## சுபஸ்ரீயை கொன்றது யார்?






### பேனர் படுகொலை

- முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா காலம் முதலே பேனர் வைப்பதன் மூலம் இந்தியா முழுவதும் பிரபலமான அதிமுக அதிமுகவிற்கு பேனர் வைப்பதற்கு சென்னை மாநகராட்சி பல கட்டுப்பாடுகளை கொண்டு வந்தது.
- அந்தக் கட்டுப்பாடுகளை மதிக்காமல் சாலையின் இருபுறங்களிலும் ஆளுயர பேனர்களை வைப்பது அதிமுகவின் பழக்கமாகவே இருந்தது. பேனர் அச்சிடும் அச்சகங்களின் அங்கீகாரம் ரத்து செய்யப்படும் என்ற விசித்திர தீர்ப்புக்குப் பிறகும் தொடர்ச்சியாக அதிமுக பேனர்களை சாலைகளில் வைப்பதை தொடர்ச்சியாக செய்தது.
- சென்னையில் சுபஸ்ரீ என்கிற இளம் பெண் தன்னுடைய வாகனத்தில் வரும் போது அதிமுக பேனர் சரிந்து விழுந்ததில் நிலை தடுமாறி அந்த பெண் கீழே விழுகிறார். பின்னே வந்த லாரி அவர் தலையில் ஏறியதால் உயிரிழந்தார்.
- இது தொடர்பாக அதிமுக நிர்வாகிகள் யாரும் கைது செய்யப்படவில்லை. மாறாக அதை கூலிக்கு அச்சிடும் அச்சகம் தான் மூடப்பட்டது.
- அதிகார போதையில் எல்லா கட்டுப்பாடுகளையும் மீறி தொடர்ச்சியாக இதுபோன்ற பேனர் கொலைகளில் அதிமுக ஈடுபட்டுள்ளது.


இயக்கத்தில் இணைய/வாட்ஸ்அப்/டெலிகிராம்/சிக்னல்: **98848 64010 | 94443 27010**

### வீழட்டும் அதிமுக-பாஜக, வெல்லட்டும் தமிழ்நாடு

# தமிழ் அழிப்பு! இந்தி திணிப்பு!

## தமிழ் தெரிஞ்சா இனி உனக்கு வேலையில்ல!!

## சமஸ்கிருதத்திற்கு நிதி தமிழுக்கு அநீதி




### இந்தி திணிப்பு

- உலக மொழிகளுள் மூத்த மொழி, உலகின் மொழியியல் அறிஞர்களால் அங்கீகரிக்கப்பட்ட 6 செம்மொழிகளுள் ஒன்று, உலகப்பொதுமறையாம் திருக்குறளை கொண்ட மொழி என்று இத்தனை சிறப்புகளை கொண்ட தமிழ் மொழியை அழிக்க துடிக்கிறது இந்துத்துவ பாஜக அரசு.
- 1939, 1965 என்று இந்தியை இரண்டு முறை இந்தியை நேரடியாக திணித்து தமிழை அழிக்க முயன்றபோது போர் புரிந்து தமிழ் மொழியை காத்தோம்.
- நேரடியாக இந்தியை திணிக்க முடியாது என்பதை உணர்ந்த பாஜக புதிய கல்விக் கொள்கை மூலம் இந்திய கட்டாயம், தமிழ்நாட்டில் இயங்கும் மத்திய அரசு அலுவலகங்களில் இந்தி கட்டாயம், தமிழ் மொழி வளர்ச்சிக்கு நிதி ஒதுக்காதது என்று பல வழிகளில் இந்தியை திணிக்கிறது பாஜக. இதற்கு ஒரு சிறு கண்டணம் கூட அதிமுக விடமிருந்து வரவில்லை.
- இந்தியை கற்காதது தான் நம்மை வடநாட்டு இந்துத்துவ அரசியலிலிருந்து காத்து வருகிறது. ஒரு வேளை நாம் இந்தி கற்றிருந்தோமேயானால் வடநாட்டு தலைவர்கள் மிக எளிதாய் இந்துத்துவ கருத்துகளை நம்மிடம் சேர்த்திருப்பர். தமிழ்நாட்டிற்கு பிப்ரவரி மாதம் மோடி வந்தபோது தனக்கு தமிழ் தெரியாதது வருத்தமளிக்கிறது என்று சொன்னது, “என்னால் உங்களை ஏமாற்ற முடியவில்லை, காரணம் நான் பேசுவது உங்களுக்கு புரியவில்லை” என்பது தான் பொருள்.
- இந்துத்துவ அரசியலை தமிழ்நாட்டுக்கு கொண்டு வருவதற்கான முதல் படி இந்தியை திணிப்பது. அதை எக்காரணம் கொண்டும் தடுப்போம்.

### தமிழ்நாட்டில் இந்தி திணிப்பிற்கு எதிராக நடந்த போராட்டங்கள்



இயக்கத்தில் இணைய/வாட்ஸ்அப்/டெலிகிராம்/சிக்னல்: **98848 64010 | 94443 27010**

வீழட்டும் அதிமுக-பாஜக, வெல்லட்டும் தமிழ்நாடு

# காசாகும் ‘குடிநீர்’

## குடி தண்ணிக்கும் வரியா?

## இடியாய் இறங்கும் ஸ்மார்ட் சிட்டி மீட்டர்






### திட்டமிட்ட தண்ணீர் பஞ்சம்

- வருடாவருடம் தண்ணீர் தேவை எவ்வளவு என்பது அதிமுக அரசுக்கு தெரிந்துதான் இருக்கிறது. இருந்தாலும் மக்கள் தேவையை பூர்த்தி செய்ய எந்த வேலையையும் செய்வதில்லை. ஏனெனில் தண்ணீரை தனியாருக்கு தரவேண்டும்.
- சென்னை கோவை திருப்பூர் மாதிரி நகர்கள் ஸ்மார்ட் சிட்டி என பெயர் வைக்கப்பட்டு கோவை திருப்பூரில் தண்ணீரை தனியாரிடம் கொடுக்கப்பட்டுவிட்டது.
- அடிப்படை தேவையான தண்ணீருக்கும் இனி மின்சாரத்தைப் போல மீட்டர்.
- இன்று தண்ணீருக்கு நம்மை அலையவிட்டுவிட்டு நாளை அதை காசு கொடுத்து வாங்க வைக்கவே இந்த செயற்கை தண்ணீர் பஞ்சம் கொண்டுவரப்பட்டது.
- நன்றாக மழை பெய்யக்கூடிய, அதிக நீர்நிலைகள், ஏரிகள் இருக்கும் சென்னைக்கு குடிநீரை கடல்நீரில் இருந்து கொண்டு வரப்போகிறோம் என்று கொள்ளை அடிக்க திட்டம் போடுகிறார்கள்
- இவர்கள்தான் வெள்ளத்தை கையாள தெரியாமல் சென்னை மக்களை மூழ்கடித்தார்கள்.






இயக்கத்தில் இணைய/வாட்ஸ்அப்/டெலிகிராம்/சிக்னல்: **98848 64010 | 94443 27010**

வீழட்டும் அதிமுக-பாஜக, வெல்லட்டும் தமிழ்நாடு

# பேரழிவுகள்

## கஜா, ஒக்கி புயல்களுக்கு வராத மோடி ஓட்டு கேக்க மட்டும் ஏன் வர்ராரு







### ஓக்கி/கஜா

- ஒக்கி புயல் தமிழக கடற்கரை பகுதிகளை 2017 ஆம் ஆண்டு சூரையாடியது. நூற்றுக்கணக்கில் மீனவர்கள் தொலைந்தனர். இறப்பு எண்ணிக்கை என்னவென இதுவரை தெரியவில்லை.
- மீட்பு விமானங்களை வாடகைக்கெல்லாம் விடும் மத்திய அரசு ஏனோ புயலில் சிக்கி காணாமல் போன தமிழக மீனவர்களை மீட்க எந்த முயற்சியும் எடுக்கவில்லை. அரசு கைவிட்டுவிட்டதால் கரையிலிருந்த மீனவர்கள் வேறு வழியின்றி தாங்களே தேடத் தொடங்கி மீட்கப்பட்டவர்கள் தான் பெரும்பான்மையானவர்கள்.
- 9300 கோடி நிவாரணமாக மத்திய அரசிடம் தமிழக அரசு கேட்டதற்கு முழுதாக ஆயிரம் கோடி கூட கொடுக்காமல் வஞ்சித்தது பாஜக அரசு.
- கஜா புயல் டெல்டா மாவட்டங்களை ஒட்டுமொத்தமாக சிதைத்தது. தென்னைமரங்கள் நெற்பயிர்கள் வீடுகள் நீர் இறைக்கும் கருவிகள் என்று விவசாயிகளின் வாழ்நாள் சேமிப்பை ஒட்டுமொத்தமாக காவு வாங்கியது கஜா.
- கஜா புயல் நிவாரண நிதியாக தமிழ்நாடு அரசு கேட்டது 15000 கோடி. இதிலும் தமிழ்நாட்டை வஞ்சித்த பாஜக அரசு கொடுத்தது வெறும் 1100 கோடி.

### மே பதினேழு இயக்க நிவாரணப் பணிகள்










இயக்கத்தில் இணைய/வாட்ஸ்அப்/டெலிகிராம்/சிக்னல்: 98848 64010 | 94443 27010

வீழட்டும் அதிமுக-பாஜக, வெல்லட்டும் தமிழ்நாடு

# பறிபோகும் 'இட ஒதுக்கீடு'

**வன்னியர், கவுண்டர், நாடார், பறையர், நாயுடு, பள்ளர், ரெட்டி, கோனார், முத்தரையர், முக்குலத்தோர் என அனைத்து சமூகத்தினரின் இட ஒதுக்கீட்டிற்கு**

## இந்திய அளவில் வேட்டு வைக்கும் பாஜக, ஒத்துழைக்கும் அதிமுக.


Total Marks
100

| SC | ST | OBC | EWS | GEN | LD |
|---|---|---|---|---|---|
| 61.25 | 53.75 | 61.25 | 28.5 | 61.25 | 57.25 |

CONGRATULATIONS
TIONS You have been shortlisted for the Main Examinatio

### இட ஒதுக்கீடு(Reservation)

- 69% இட ஒதுக்கீடு நமக்கெல்லாம் கிடைத்ததால் தான் நம் வீட்டு பசங்க டாக்டராவும், இன்ஜினியராகவும்,நீதிபதிகளாக, ஐஏஎஸ் அதிகாரிகளாக ஆகியிருக்காங்க.

- தமிழ்நாடு இந்தியாவின் மற்ற மாநிலங்களை விட முன்னேறிய மாநிலமா இருப்பதற்கு காரணம் இட ஒதுக்கீடு தான்.
- பிஜேபி பொறுப்பேற்ற பின் BC,MBC என்று சொல்லப்படுகிற முக்குலத்தோர், வன்னியர்,முதலியார், கவுண்டர், நாடார், ரெட்டியார், முத்தரையர், ஆகியோருக்கான 5000(தமிழ்நாட்டில்) மருத்துவ இடங்களை பறிக்கும் செயலை செய்திருக்கிறது.
- SC/ST பிரிவினருக்கு சேர வேண்டிய ஐஐடி பேராசிரியர் பணியிடங்களில் 15%மட்டுமே நிரப்பட்டுள்ளது.
- இட ஒதுக்கீட்டை ஒழிப்பது தான் ஆர்எஸ்எஸ் பிஜேபி யோட லட்சிய கொள்கை. அதற்கு தான் புதிய கல்விக் கொள்கையை கொண்டு வராங்க பிஜேபி.
- இந்த பிஜேபி அரசை தான் அடிமை அதிமுக அரசு முழுமையாக ஆதரித்தது. இப்போது அவர்களுடனே கூட்டணியும் வைத்து உங்களிடம் ஒட்டு கேட்டு வராங்க.

## மே பதினேழு இயக்கம் நடத்திய இடஒதுக்கீட்டு உரிமை பாதுகாப்பு பொதுக்கூட்டம்












இயக்கத்தில் இணைய/வாட்ஸ்அப்/டெலிகிராம்/சிக்னல்: **98848 64010 | 94443 27010**

**வீழட்டும் அதிமுக-பாஜக, வெல்லட்டும் தமிழ்நாடு**

# ‘ஸ்டெர்லைட்’ படுகொலைகள்

## மார்வாடி கம்பெனிக்காக 15 தமிழரை சுட்டுக்கொலை செய்த அதிமுக.

## மறக்க முடியுமா மாணவி ஸ்னோலினை?







### ஸ்டெர்லைட் - ஸ்னோலின்

- ஸ்னோலின் தூத்துக்குடியைசேர்ந்த 10-ஆம்வகுப்பு மாணவி.
- தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலையால் மக்களுக்கு ஏற்படும் பிரச்சனையால், அதை மூடக்கூறி நடந்த ஆர்பாட்டத்தில் பல்லாயிரக் கணக்கானோருடன் அவரும் கலந்துக்கொண்டார்.
- தனியார் நிறுவனம் முதலாளி ஒருவருக்கு விசுவாசமாக நடந்துக் கொள்ள ஸ்னோலின் உட்பட 13 பேரை தமிழக அரசு சுட்டுக் கொன்றது.
- முதலமைச்சர் பழனிச்சாமி “எனக்கு அதைப்பற்றி எதுவும் தெரியாது. நான் டிவி யைப் பார்த்துதான் தெரிந்துக் கொண்டேன்” என்று சொல்லி பாஜக வின் பிடியில் தான் இருப்பதை மறைமுகமாக ஒத்துக் கொண்டார்.
- இன்னும் சுட்டுக் கொன்ற காவலாளிகள் பெயர்கூட வெளியில் வராமல் பார்த்துக் கொள்கிறார்கள் பாஜக-அதிமுக அரசியல் வாதிகள்.
- இந்த ஆலையால் மக்களுக்கு உடல்நலக் குறைவு ஏற்படும், சுற்றுச் சூழல் மாசு ஏற்படும் எனக் கூறி அது முதலில் ஆரம்பிக்கப்பட்ட மகாராஸ்டிராவில் இருந்து 1993ல் துரத்தப்பட்டது. அடுத்த ஆண்டு தமிழ்நாட்டில் இது துவங்கப்பட்டது.
- நேற்று ஸ்னோலினையும் 13 பேரையும் சுட்டு கொன்ற காவல்துறை நம்மை சுட மட்டும் தயங்குமா என்ன?
- தமிழ் நாட்டை குப்பை தொட்டியாக்கும் பாஜகவையும் அதற்கு துணைநிற்கும் அதிமுகவையும் புறக்கணிப்போம்.

## மே பதினேழு இயக்க போராட்டங்கள்









இயக்கத்தில் இணைய/வாட்ஸ்அப்/டெலிகிராம்/சிக்னல்: **98848 64010 | 94443 27010**

வீழட்டும் அதிமுக-பாஜக, வெல்லட்டும் தமிழ்நாடு

# ‘சல்லிக்கட்டு’

## மோடி-ஓ.பி.எஸ்ஸை வீழ்த்திய ஜல்லிக்கட்டு காளை









### சல்லிக்கட்டு

- தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டான சல்லிகட்டை நடத்த கூடாது என்று 2016ல் பீட்டா என்ற அமைப்பு உச்ச நீதிமன்றத்தில் வழக்கு போட்டது. உச்ச நீதிமன்றமும் சல்லிக்கட்டு நடத்த தடை போட்டாங்க.
- சென்னை மெரினா கடற்கரை மற்றும் தமிழ் நாட்டின் பல இடங்களில் இளைஞர்கள் மாணவர்கள் என தன்னெழுச்சியாக தொடர் போராட்டம் நடைபெற்றது.
- உலகமே வியந்த இந்த தொடர் மக்கள் போராட்டத்தின் விளைவாக ஏற்பட்ட நெருக்கடியால் அப்போதைய முதலமைச்சர் பன்னீர்செல்வம் தலைமையிலான சட்டமன்றத்தில் அவசர சட்ட மசோதா நிறைவேற்றப்பட்டு அவசரஅவசரமாக குடியரசுத் தலைவரிடம் ஒப்புதல் பெற்று சட்டமாக்கப்பட்டது.
- ஆனால் போராட்டத்தின் கடைசி நாள் காவல்துறை மிகப்பெரிய அராஜகத்தில் ஈடுபட்டு போராட்டம் நடத்தியவர்கள் மீது தடியடி நடத்தியது. அப்பாவி மீனவர்களின் வீடுகளை கொளுத்தியது, போராடிய நபர்களின் மீது வழக்குகள் போட்டது. அது இன்றுவரை திரும்பப் பெறப்படவில்லை.

## மே பதினேழு இயக்க போராட்டங்கள்







இயக்கத்தில் இணைய/வாட்ஸ்அப்/டெலிகிராம்/சிக்னல்: **98848 64010 | 94443 27010**

வீழட்டும் அதிமுக-பாஜக, வெல்லட்டும் தமிழ்நாடு

# தனியார்மயம்

## மக்கள் சொத்தை விற்கும் மகத்தான அரசு!

## அப்பன் சேர்த்த சொத்தை விற்கும் ஊதாரி பிள்ளை.















### தனியார்மயம்

- அரசு நிறுவனங்கள் அனைத்தையும் தனியாரிடம் வித்திட்டு இருக்காங்க. ஒரு நல்ல, திறமையான பிரதமரா இருந்தா அரசு நிறுவனங்களை நல்ல படியா நிர்வாகம் பண்ணி அதிக லாபம் சம்பாதிக்க வைக்கனும்.
- ஆனால் பாஜக ஆட்சி பொறுப்பேற்றவுடன் எல்லா அரசு நிறுவனங்களும் திட்டமிட்டு நட்டமடைய வைக்கப்பட்டன.
- உதாரணமாக ஜியோ நிறுவனம் தொலைத் தொடர்பில் வளர மிகப்பெரிய அரசுத்துறை நிறுவனமான பிஎஸ்என்எல் நிறுவனத்துக்கு 4G அலைக்கற்றை ஒதுக்கவே இல்லை. அதனால் பிஎஸ்என்எல் நஷ்டமடைந்து அதன் இழப்பு முழுவதையும் ஜியோ எடுத்துக் கொண்டது.
- ஹெச்ஏஎல் நிறுவனத்துக்கு வர வேண்டிய ரஃபேல் விமானம் தயாரிப்பையும் அனில் அம்பானிக்கு கொடுத்து ஹெச்ஏஎல் நிறுவனத்தை நஷ்டத்தை நோக்கி கொண்டு செல்கிறது அரசு.
- பொதுத்துறை நிறுவனங்கள் நஷ்டமடைவதால் அரசுக்கு வருமான இழப்பு ஏற்படுகிறது. அதை சரிகட்டவே அரசு பெட்ரோல், டீசல் விலையை உயர்த்துகிறது.

இயக்கத்தில் இணைய/வாட்ஸ்அப்/டெலிகிராம்/சிக்னல்: **98848 64010 | 94443 27010**

## தமிழ்நாட்டை காத்திட

# அதிமுக–பாஜக கூட்டணியை ஆட்சியிலிருந்து அகற்றுவோம்

நீட் தேர்வால்
படுகொலை
செய்யப்பட்ட
**அனிதா**



ஸ்டெர்லைட்டால்
படுகொலை
செய்யப்பட்ட
**ஸ்னோலின்**

## வீழட்டும் அதிமுக-பாஜக

**வெல்லட்டும்**
**தமிழ்நாடு**

## ‘தமிழினம் காக்க மே17 இயக்கத்தில் இணைந்து பணியாற்ற வாருங்கள்’

**தமிழ்நாடு காக்க தன்னலமற்ற சேவை செய்ய அழைக்கிறோம்**

**சாதி மதம் கடந்து குடும்பம் குடும்பமாக தமிழினத்தை காக்க ஒன்றுபட்டு இந்த ஆட்சிக்கு முடிவு கட்டுவோம். தமிழர் உரிமைகளை அடகுவைப்பவர்கள் ஆட்சிக்கு வர இயலாது என்பதை உணரச் செய்வோம்.**

**தமிழ்நாடு வெல்லட்டும், தமிழினம் தலைநிமிரட்டும், தமிழ் மொழி தழைக்கட்டும்**

# மே பதினேழு இயக்கம்


இயக்கத்தில் இணைய/வாட்ஸ்அப்/டெலிகிராம்/சிக்னல்

**98848 64010 | 94443 27010**

contact.may17@gmail.com | www.may17iyakkam.com | www. may17kural.com
facebook.com/mayseventeenmovement | twitter.com/May17Movement

# இவர்களுக்கா உங்கள் வாக்கு?




லண்டனில் வாழும் குஜராத்தியின் ஸ்டெர்லைட் கம்பெனிக்காக 15 தமிழர்களை சுட்டுக்கொன்ற எடப்பாடி அரசு.




மோடியின் சாட்டைக்கு பயந்து நடுங்கி சர்க்கஸ் விந்தைகள் புரியும் பாஜகவின் அடிமைகளாக மாறிப்போன OPSசும் EPSசும்



விவசாயிகளையும், விவசாயத்தையும் கார்பரேட்டுக்கு அடகு வைத்த பாசிச மோடி அரசு



தூத்துக்குடியில் ஸ்டெர்லைட் நச்சு ஆலைக்கு எதிராக போராடிய மக்கள் மீது எடப்பாடி பழனிச்சாமியின் கீழ் இயங்கும் காவல்துறை நடத்திய அரச பயங்கரவாதம்



தமிழர்களின் குடும்பங்களை சீரழித்துவரும் மதுக்கடைகளை மூட பெண்கள் போராடிய போது, பெண்களை தாக்கியதோடு போராடியவர்கள் மீது வழக்கு பதிந்தது எடப்பாடி அதிமுக அரசு

விழிப்புணர்வு வெளியீடு

## மே பதினேழு இயக்கம்